**தலைப்பு 119 – மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2016 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 119 – மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றினை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2017 செப்தம்பர் 19 ஆம் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வினதும், கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளின் செவ்வை பார்த்தலினதும் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் திட்டமிடல், அமுல்படுத்துதல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 2. கணக்குகள்

---

### 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

---

**மொத்த நிதியேற்பாடும் செலவினமும்**

---

அமைச்சிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 13,667.34 மில்லியனாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியளவில் இதில் ரூபா 13,020.26 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அமைச்சிற்கு ஒதுக்கப்பட்டிருந்த தேறிய நிதி ஏற்பாடுகளிலிருந்து ரூபா 647.08 மில்லியன் அதாவது 4.73 சதவீத நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| செலவினம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 508.64 | 476.60 | 32.04 | 6.30 |
| மூலதனம் | 13,158.70 | 12,543.66 | 615.04 | 4.67 |
| மொத்தம் | 13,667.34 | **13,020.26** | **647.08** | **4.73** |

## 2.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

### பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட எல்லைகள்

அமைச்சிற்குரிய 11901 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 8.00 | 6.10 | 2.40 | 3.15 | 15.00 | 10.08 |

## 2.3 கட்டுநிதிக் கணக்கு

அமைச்சின் கீழான 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 7002/0000/00/0038/0016/000 ஆம் கட்டுநிதிக் கணக்கின் மீதி ரூபா 22.18 மில்லியனாக இருந்தது. இது அமைச்சின் கட்டிடத்தின் வாடகை வைப்பாக இருந்ததுடன் உடன்படிக்கை காலம் முடிவடையும் போது தீர்வுசெய்வதற்காக தீர்வுசெய்வதாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

## 2.4 பொது வைப்புக் கணக்குகள்

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமைச்சின் கீழான 02 பொது வைப்புக் கணக்குகளின் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 4.19 மில்லியன் கூட்டுமொத்தமாக இருந்தன.

| கணக்கு இலக்கம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா மில்லியன் |
| 6000/0000/00/0016/0112/000 | 3.38 |
| 6000/0000/00/0013/0122/000 | 0.81 |
| மொத்தம் | **4.19** |

## 2.5 கணக்காய்வு அவதானிப்புக்கள்

மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்படி 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகளுக்கு உட்படத் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

# 3. பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள்

## 3.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

### பாதீட்டு முரண்

செலவின விடயமொன்றிற்காக ரூபா 96.00 மில்லியனான மிகை நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டின் போது நிதிப் பிரமாணம் 66 இன் பிரகாரம் ரூபா 18.28 மில்லியன் வேறு செலவினங்களுக்கு மாற்றப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் தேறிய நிதிஏற்பாட்டில் ரூபா 59.92 மில்லியன் பயன்படுத்தப்பட்டதன் பின்னர் சேமிப்புக்கள் ரூபா 17.79 மில்லியனாக இருந்தது. இதன் பிரகாரம் தேறிய நிதிஏற்பாடு 22.90 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது.

## 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

### வருடாந்த பொருள் மெய்மையாய்வு நடாத்தல்

அமைச்சின் அலுவலகம் தொடர்பாக பொருள் மெய்மையாய்வு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.3 பொறுப்புக்களுக்கு உட்படல்

மீளாய்வாண்டின் போது நிதிப்பிரமாணம் 94(1) ஏற்பாடுகளுக்கு முரணாக 17 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த நிதிஏற்பாடுகள் ரூபா 4,207,198 ஆல் மிகைத்து பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

## 3.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுச் செவ்வையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

(அ) 2010 மே 14 ஆந் திகதிய சீஏ/1/17/1 ஆம் இலக்க சனாதிபதி செயலகத்தின் அரச செலவின முகாமைத்துவம் தொடர்பான சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்திக்கு இணங்காத வகையில் அமைச்சருக்காக 04 வாகனங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) மேற்குறித்த சுற்றறிக்கையின் 2.1 பந்தியிலிருந்து விலகி அமைச்சருக்காக அங்கீகாரிக்கப்பட்ட பதவியணிக்கு மேலதிகமாக மேலும், 05 உத்தியோகத்தர் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

## 3.5 வெளிநாட்டு உதவி செயற்திட்டம்

### (அ) வெளிநாட்டுதவி பயன்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

#### (i) மாற்று எரிசக்தி மாற்று தள செயற்திறன் மேம்படுத்தல் செயற்திட்டம்

04 பல்கலைக்கழகங்களிலும் தனியார் துறையின் நிறுவனமொன்றுக்காக வீட்டின் மேல் சூரிய மின் கலங்கள் பொருத்துவதற்காக ரூபா 100 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் மழையுடன் கூடிய காலநிலை காரணமாக தனியார் நிறுவனங்களில் சூரிய மின் கலங்கள் பொருத்துதல் 2016 ஆம் ஆண்டின் போதும் மேற்கொள்ளப்படாமையால் ரூபா 34.95 மில்லியன் ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

(ii) **நிலைபேறான உயிரியல் நிலையான எரிபொருள் செயற்திட்டம்**

மதிப்பிடப்பட்ட ரூபா 31.20 மில்லியன் கிரயத்திலான இச்செயற்திட்டத்தின் மீளாய்வாண்டின் போது செயற்திட்டங்களை செயற்படுத்தும் போது மேற்கொள்ளப்பட்ட மாற்றங்கள் காரணமாக திட்டமிடப்பட்டதன் பிரகாரம் பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக மீளாய்வாண்டின் போது ரூபா 15,148,881 அதாவது நிதிஏற்பாட்டின் 49 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) **செயற்திட்டத்தை நிறைவேற்றுவதில் தாமதங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) **மாற்று எரிசக்தி நுழைவுகளை மேம்படுத்தல்**

ஸ்ரீ ஜயவர்த்தனபுர முறைமை கட்டுப்பாட்டு நிலையத்தின் நிர்மாணத்திற்காக ரூபா 2,863.3 மில்லியன் மதிப்பிடப்பட்டிருந்ததுடன் அது 2014 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு 2016 திசெம்பர் மாதம் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தது. 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அதில் ரூபா 2,807 மில்லியன் மாத்திரம் செலவிடப்பட்டிருந்ததுடன் அத்திகதியில் செயற்திட்டத்தின் பௌதீக முன்னேற்றம் 69 சதவீதம் மாத்திரமாக இருந்தது.

(ii) **நிலைபேறான மின்சக்தி துறை ஒத்துழைப்பு செயற்திட்டம்**

கிரிபத்கும்பற தள உப நிலையத்தை மேம்படுத்துவதற்காக 2015 ஆம் ஆண்டில் ரூபா 1,042 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் இச்செயற்திட்டம் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அதில் ரூபா 831 மில்லியன் மாத்திரம் செலவிடப்பட்டிருந்ததுடன் அத்திகதியில் செயற்திட்டத்தின் பௌதீக முன்னேற்றம் 67 சதவீதமாக இருந்தது.

## 3.6 நட்டங்களும் சேதங்களும்

நிதிப்பிரமாணம் 104(4) இன் பிரகாரம் 2004 ஆம் ஆண்டிலிருந்து 2016 ஆம் ஆண்டு வரை 10 சந்தர்ப்பங்களின் போது அமைச்சின் வாகனங்களின் விபத்துக்கள் தொடர்பாக ரூபா 838,045 ஆன நட்டமொன்றை 2017 ஆகஸ்ட் 15 ஆந் திகதி வரையிலும் உரிய தரப்பினர்களிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 3.7 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அமைச்சின் பெயரில் பதிவு செய்யப்பட்டிருந்த கெப் வண்டியொன்று மோட்டார் சைக்கிளொன்றும் காணாமல் போயிருந்ததுடன் அது தொடர்பாக குற்றத் தடுப்பு பரிசோதனை திணைக்களத்தினால் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2016 மார்ச் 01 ஆந் திகதிய C 04 - 13- CR ஆம் இலக்க குற்றத் தடுப்பு

பரிசோதனை திணைக்களத்தின் அறிக்கையின் பிரகாரம் கெப் வண்டி பழுதடைந்த நிலையில் வாரியபொல மின் பொறியியலாளரினால் ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டிருந்ததாகவும் மோட்டார் சைக்கிள் உருக்குலைந்துள்ளதாகவும் அதன் பிரகாரம் குற்றச்சாட்டொன்றை தொடுப்பதற்கு போதியளவு விடயங்கள் இல்லையென குறிப்பிடப்பட்டு புலனாய்வு பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் அவ்வாகனங்களின் உரித்து அமைச்சின் பெயரில் இருப்பது அவதானிக்கப்பட்டது.

(ஆ) இலங்கை மின்சார சபையின் நிதிக்கூற்றுக்களில் அமைச்சின் கட்டளை அடிப்படையில் செலவிடப்பட்ட அமைச்சிலிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 12,742,305 ஆன மீதியொன்று 4 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக அறவிடப்படாது காணப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் இம்மீதியை தீர்வு செய்வதற்கு எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.8 மனித வளங்கள் முகாமைத்துவம்

### (அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு காணப்பட்டது.

| | ஊழியர்களின் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 19 | 14 | 05 | |
| (ii) | மூன்றாம் நிலை | 04 | 01 | 03 | |
| (iii) | இரண்டாம் நிலை | 72 | 51 | 21 | |
| (iv) | ஆரம்ப நிலை | 46 | 33 | 13 | |
| | | - | 10 | - | 09 |
| | | - | 02 | - | 02 |
| | **மொத்தம்** | **141** | **111** | **42** | **11** |

### (ஆ) வேறு தரப்பினரிடமிருந்து பெற்றுக்கொண்ட மனித வளங்கள்

மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சினால் வேறு தரப்பினரிடமிருந்து பெற்றுக்கொண்ட மனித வளங்கள் தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | ஊழியர்களின் வகை | எண்ணிக்கை | மனித வளங்கள் வழங்கப்பட்ட தரப்பினர் | காலப்பகுதி |
|---|---|---|---|---|
| (i) | மின்சார பொறியியலாளர் | 1 | | 2008.02.08 ஆந் திகதி முதல் |
| (ii) | கட்டுப்பாட்டு இணைப்பாளர் | 2 | இலங்கை மின்சார சபை | 2015.05.18 ஆந் திகதி மற்றும் 2015.10.21 ஆந் திகதி முதல் |
| (iii) | தட்டெழுத்தாளர் | 2 | | 2010.11.18 ஆந் திகதி மற்றும் 2015.11.27 ஆந் திகதி முதல் |
| (iv) | எழுதுனர் | 2 | | 2013.01.16 ஆந் திகதி மற்றும் 2014.03.05 ஆந் திகதி முதல் |
| (v) | பயிற்சி பெறும் கனிஷ்ட தொழில்நுட்ப உதவியாளர் | 1 | இலங்கை மின்சார சபை | 2015.11.02 ஆந் திகதி முதல் |
| (vi) | அலுவலக உதவியாளர் | 3 | | 2011.05.06 ஆந் திகதி மற்றும் 2011.08.22 ஆந் திகதி முதல் |
| (vii) | சாரதி | 1 | | 2011.08.22 ஆந் திகதி முதல் |
| (viii) | இணையத்தள வடிவமைப்பாளர் (மனித வலு) | 1 | | 2015.03.19 ஆந் திகதி முதல் |
| (ix) | வீடியோ கெமரா உதவியாளர் (மனித வலு) | 1 | | 2015.03.19 ஆந் திகதி முதல் |
| (x) | சாரதி | 1 | வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு | 2015.09.10 – ஆந் திகதி முதல் |
| (xi) | சாரதி | 1 | இலங்கை மத்திய வங்கி | 2015.11.23 ஆந் திகதி முதல் |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2010 மே 14 ஆந் திகதி சீஏ/1/17/1 ஆம் இலக்க ஜனாதிபதி செயலக அரச செலவின் முகாமைத்துவம் தொடர்பான சுற்றறிக்கையின் 2.2 ஆம் பந்தியின் பிரகாரம் கௌரவ அமைச்சர்கள், பிரதி அமைச்சர்களுக்காக அரச கூட்டுத்தாபனங்கள் அல்லது நியதிச்சட்ட சபைகள் நிறுவனமொன்றின் உத்தியோகத்தரொருவரை இணைத்தால் அவருக்கு நிறவனத்திடமிருந்து கிடைத்த சம்பளத்தை அல்லாது இணைக்கப்பட்ட பதவிக்கான சம்பளத்தை கொடுப்பனவு செய்ய வேண்டும். எனினும், அமைச்சுக்கு இணைக்கப்பட்டிருந்த வெளிநிறுவனங்களின் உத்தியோகத்தர்களுக்கு அவர்கள் சேவை புரிந்த நிறுவனத்தில் பெற்ற சம்பளம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ii) அமைச்சின் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த மின்சார சபையின் 14 ஊழியர்கள் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் சாரதிக்காக சம்பளம் முறையே ரூபா 15,754,889, மற்றும் ரூபா 2,215,572 தொகை இலங்கை மின்சார சபையினால் மீள நிரப்பப்பட்டிருந்ததுடன் எரிசக்தி அதிகாரசபையின் உத்தியோகத்தரொருவருக்காக ரூபா 948,528 சம்பளம் அந்த அதிகாரசபையால் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.